

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், பஞ்சலிங்கபுரம் ஊராட்சி பகுதியில், நெல் வயல்களில் வரப்புகளில் உழுந்து சாகுபடி செய்து, அதிக மகசூல் பெற, வரப்புகளில் உழுந்து விதைப்பு பணிகளை இன்று (11.08.2016) துவக்கி வைத்தார். இணை இயக்குநர் (வேளாண்மை துறை) திரு. இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 515/2016 நாள்: 11.08.2016

# பயிறு உற்பத்தியை பெருக்கவும் விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிக்கவும் சிறப்பு முயற்சிகள் - மாவட்ட ஆட்சியர் அவர்கள் தொடங்கி வைப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னிப்பூ, கும்பப்பூ ஆகிய இரண்டு பருவங்களிலும் தலா சுமார் 6500 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கும்பப்பூ சாகுபடிக்குப் பின் நஞ்செய் தரிசில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டு விவசாயிகள் அதிக மகசூல் எடுத்து வருகின்றனர். கடந்த சில வருடங்களாக தென்னையிலும் இளம் ரப்பர் பயிர்களுக்கு இடையிலும் ஊடுபயிராக பயிறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

பயிறுவகைப் பயிர்களை அதிக பரப்பில் சாகுபடி செய்து உயர் தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக உற்பத்தியும் வருமானமும் பெறுவதற்கு விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க அகஸ்தீஸ்வரம் வட்டாரம் பஞ்சலிங்கபுரத்தில் இன்று 11.08.2016 காலை சிறப்பு முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான்,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த சிறப்பு நிகழ்ச்சியில் அகஸ்தீஸ்வரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திருமதி.ஜாஸ்மின்லதா வரவேற்புரை நிகழ்த்தினார். கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.நா.இளங்கோ அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்.

பயிறுவகைப் பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய உயர் தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேட்டினை மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான்,இ.ஆ.ப அவர்கள் வெளியிட்டார்கள். மேலும் விதைப்பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு உயர்ரக விதைகள் வழங்கப்பட்டன. நெல் இயந்திர நடவுக்காக மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மண்வள அட்டைகள் வழங்கப்பட்டன. உரம் விலை குறைப்பு தொடர்பான அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

நெல் வயல்களின் வரப்புகளில் உளுந்து சாகுபடி செய்து அதிக மகசூல் பெற வரப்புகளில் உளுந்து விதைப்பு பணிகளை பஞ்சலிங்கபுரம் பகுதிகளில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான்,இ.ஆ.ப அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.எம்.நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர்(மத்திய திட்டம்) திரு.வி.சந்திரசேனன் நாயர், வேளாண்மை துணை இயக்குநர்(மாநில திட்டம்) திரு.மோ.இராஜகுமார், பஞ்சலிங்கபுரம் ஊராட்சி தலைவர் திரு. ஆர். கண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுபடி தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையில் விவசாயிகளின் உற்பத்தியையும் வருமானத்தையும் பெருக்கிட வழங்கப்படும் உயர் தொழில்நுட்பங்களை கடைபிடித்து பயன்பெறுமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வரப்புகளில் உளுந்து சாகுபடி செய்து வருமானத்தை பெருக்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.